முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சேலம்

முன்னிலை: திரு. இரா.வேலரஸ், B.Sc.,B.L., LL.M.,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, சேலம்.
2025–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 04 ம் நாள் வியாழக்கிழமை

இடைநிலை மனு எண். 06/2021
in
அசல் வழக்கு எண். 127/2021

1. சியாமளா கௌரி
2. மைனர் திவ்யேஷ்
மைனரின் சார்பாக அடுத்த தோழி/ பாதுகாவலர் தாயார்
சியாமளா கௌரி ... மனுதாரர்கள்/ வாதிகள்

/எதிர்/

1. வெங்கடேஷ்
2. சார் பதிவாளர், ஓமலூர்
3. மாவட்ட ஆட்சியர், சேலம் .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

4. கரும்பாலை ஸ்ரீ சீனிவாசா பைனான்ஸ்,
சார்பாக அதன் நிர்வாக பங்குதாரர்.

5. ஸ்ரீ ஸ்ரீ முத்துகுமரன் பைனான்ஸ்
சார்பாக அதன் நிர்வாக பங்குதாரர்.

6. கரும்பாலை விஷ்ணு பைனான்ஸ்,
சார்பாக அதன் நிர்வாக பங்குதாரர்

7. கரும்பாலை ஸ்ரீ பாரதி பைனான்ஸ்
சார்பாக அதன் நிர்வாக பங்குதாரர்

8. K.N.R.பைனான்ஸ்
சார்பாக அதன் நிர்வாக பங்குதாரர்.

9. கரும்பாலை ஸ்ரீ பாரத் பைனான்ஸ்
சார்பாக அதன் நிர்வாக பங்குதாரர் .... எதிர்மனுதாரர்கள் /உத்தேச தரப்பினர்கள்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:14:45 +0530

இம்மனு 05.11.2025ம் தேதி என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.S.விஜயராகவன் அவர்கள் முன்னிலையாகியும், 1–ம் எதிர்மனுதாரர்/ 1–ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.செல்வகீதன் அவர்கள் முன்னிலையாகியும், 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.ஏ.மதன்மோகன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/ உத்தேச தரப்பினர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.முத்தமிழ் செல்வன் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:–

<u>உத்தரவு</u>

மனுதாரர்கள்/ வாதிகள் உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 10 (2) மற்றும் பிரிவு 151–ன் கீழ் 5 முதல் 10 எதிர்மனுதாரர்/ 5 முதல் 10 உத்தேச தரப்பினர்களை அசல் வழக்கில் 5 முதல் 10 பிரதிவாதிகளாக சேர்த்து உத்தரவிடக் கோரி இம்மனு தாக்கல் செய்துள்ளார்கள்.

2. <u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆணையுறுதி ஆவணத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகளின் சுருக்கம் பின்வருமாறு:–</u>

மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் ஆவார்கள். அசல் வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள அசையா சொத்துக்களை பாகப்பிரிவினை செய்வதற்காகவும், மனுதாரர்களுக்கு 1–ம் எதிர்மனுதாரர் ஜீவனாம்ச தொகை வழங்கவும் 1–ம் எதிர்மனுதாரர் மீது மனுதாரர்களால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1–ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு எவ்விதமான பராமரிப்பு தொகையும் கொடுக்கவில்லை. மேலும் 1–ம் எதிர்மனுதாரர் ஒரு பெண்ணுடன் தகாத உறவில் இருந்ததால்தான் 1–ம் எதிர்மனுதாரர் மீது வழக்கு தொடர வேண்டிய நிலை ஏற்பட்டது. மேலும் முதல் எதிர்மனுதாரர் தன்னிடம் எந்த தொகையும் இல்லை என்றும், தாவா சொத்துக்களிலிருந்தும் எந்த வருமானமும் இல்லை என்றும் கூறிவருகிறார்.

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:15:03 +0530

உண்மையில் 1–ம் எதிர்மனுதாரர் கரும்பாலை ஸ்ரீ சீனிவாசா பைனான்ஸ், ஸ்ரீ ஸ்ரீ முத்துகுமரன் பைனான்ஸ், கரும்பாலை விஷ்ணு பைனான்ஸ், கரும்பாலை ஸ்ரீ பாரதி பைனான்ஸ் மற்றும் கே.என்.ஆர். பைனான்ஸ், கரும்பாலை பாரத் பைனான்ஸ் ஆகியவற்றில் பங்குதாரராக இருந்து வருகிறார். மேலும் முதல் எதிர்மனுதாரர் வட்டிக்கு கடன் வழங்கும் தொழில் மூலமாகவும், குறிப்பிட்ட நிதி மூலமாகவும் ஆடம்பரமாக வாழ்ந்து வருகிறார். எனவே 1–ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு ஜீவனாம்ச தொகை வழங்க கடமைப்பட்டவர் ஆவார். 1–ம் மனுதாரர் உத்தேச தரப்பினர்களை அணுகி ஈவுத்தொகையை 1–ம் எதிர்மனுதாரருக்கு மட்டும் கொடுக்கக்கூடாது என கேட்டும் அவர்கள் அதற்கு உடன்படவில்லை. ஜீவனாம்சம் பெறுவதற்காக 1–ம் எதிர்மனுதாரரால் பங்குதொகை ஜப்தி செய்யப்பட வேண்டியுள்ளது. எனவே உத்தேச தரப்பினர்களை அசல் வழக்கில் பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கை நடத்த உத்தரவிட வேண்டுமாய் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>1–ம் எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையில் கூறப்பட்டுள்ள சங்கதிகளின் சுருக்கம் பின்வருமா:</u>–

மனு சட்டப்படியும் பொருண்மைகளின்படியும் நிலைநிற்கத்தக்கது அல்ல. இந்த எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதியால் ஒப்புக் கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். அசல் வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள அசையா சொத்துக்களை பாகப்பிரிவினை செய்வதற்காகவும், மனுதாரர்களுக்கு 1–ம் எதிர்மனுதாரர் ஜீவனாம்ச தொகை வழங்கவும் 1–ம் எதிர்மனுதாரர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1–ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு எவ்விதமான பராமரிப்பு தொகையும் கொடுக்கவில்லை

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:15:12 +0530

என்பதும், மேலும் 1–ம் எதிர்மனுதாரர் ஒரு பெண்ணுடன் தகாத உறவில் இருந்ததால்தான் 1–ம் எதிர்மனுதாரர் மீது வழக்கு தொடர வேண்டிய நிலைய ஏற்பட்டது என்று மனுதாரரால் சொல்லப்பட்டுள்ளதும் தவறானவையாகும். மேலும் முதல் எதிர்மனுதாரர் வட்டிக்கு கடன் வழங்கும் தொழில் மூலமாகவும், குறிப்பிட்ட நிதி மூலமாகவும் ஆடம்பரமாக வாழ்ந்து வருகிறார் என்பதும் தவறானவையாகும். மேலும் பராமரிப்பு தொகை வழங்கப்பட வேண்டுமா? இல்லையா என்பதை விசாரணை முடிந்தபிறகு நீதிமன்றமே தீர்மானிக்கும் இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள எதிர்மனுதாரர்கள்/உத்தேச தரப்பினர்கள் இம்மனுவிற்கு அவசியமான தரப்பினர்கள் அல்ல. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. <u>1–ம் உத்தேச தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்டு 2 முதல் 6 உத்தேச தரப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பதிலுரையில் கூறப்பட்டுள்ள சங்கதிகளின் சுருக்கம் பின்வருமாறு</u>

மனுவில் பத்தி எண்.2–ல் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறானவை ஆகும். அசையா சொத்துக்களை பாகப்பிரிவினை செய்வதற்காகவும், மனுதாரர்களுக்கு 1–ம் எதிர்மனுதாரர் ஜீவனாம்ச தொகை வழங்கவும் 1–ம் எதிர்மனுதாரர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள சங்கதிகள் எதுவும் இந்த உத்தேச தரப்பினர்களுக்கு தெரியாது. அதேபோன்று 1–ம் எதிர்மனுதாரர் 1–ம் மனுதாரருக்கு பராமரிப்பு தொகை எதுவும் வழங்க மாட்டார் என்று கூறுவதும் முற்றிலும் தவறானவையாகும். மேலும் 1–ம் எதிர்மனுதாரர் ஒரு பெண்ணுடன் தகாத உறவு வைத்துள்ளார் என்பதையும் 1–ம் மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். மேலும் 1–ம் எதிர்மனுதாரர் கரும்பாலை ஸ்ரீ சீனிவாசா பைனான்ஸ், ஸ்ரீ ஸ்ரீ முத்துகுமரன்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:15:20 +0530

பைனான்ஸ், கரும்பாலை விஷ்ணு பைனான்ஸ், கரும்பாலை ஸ்ரீ பாரதி பைனான்ஸ் மற்றும் கே.என்.ஆர். பைனான்ஸ், கரும்பாலை பாரத் பைனான்ஸ் ஆகியவற்றில் பங்குதாரர் என்பதை 1-ம் மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். எனவே இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

5 இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியம் அளிக்கவில்லை மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. <u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்:-</u>

7. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

8. தீர்வு:-

மனுதாரர்கள்/ வாதிகளால் உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 10 (2) மற்றும் பிரிவு 151-ன் கீழ் எதிர்மனுதாரர்/4-வது உத்தேச தரப்பினரை அசல் வழக்கில் 4-ம் பிரதிவாதியாக சேர்த்து உத்தரவிடக் கோரி மனு தாக்கல் செய்துள்ளார்கள்.

9 இந்த மனுதாரர்கள்/வாதிகள் இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தேச தரப்பினர்களை அசல் வழக்கில் பிரதிவாதிகளாக சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று பரிகாரம் கோரி உள்ளார்கள். மேற்படி உத்தேச தரப்பினர்கள் என்று மனுதாரர்களால் தெரிவிக்கப்படுபவர்கள் கரும்பாலை ஸ்ரீ சீனிவாசா பைனான்ஸ், ஸ்ரீ ஸ்ரீ முத்துகுமரன் பைனான்ஸ், கரும்பாலை விஷ்ணு பைனான்ஸ், கரும்பாலை ஸ்ரீ பாரதி பைனான்ஸ் மற்றும் கே.என்.ஆர். பைனான்ஸ், கரும்பாலை பாரத் பைனான்ஸ் என்கிற 6 தனியார் நிதி நிறுவனங்கள் ஆகும். ஆனால் மேற்படி அசல் வழக்கில் தனியார் நிதி நிறுவனங்களில் /உத்தேச தரப்பினர்கள் நிதி நிறுவனங்களில் வைப்பீடு செய்யப்பட்ட

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:15:27 +0530

தொகைகளை பொறுத்தும், அல்லது மேற்படி நிதி நிறுவனங்களில் 1–ம் எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதிக்கு எவ்வளவு பங்குகள் உள்ளது என்பதை பொறுத்தும் குறிப்பாக தெரிவித்து அசல் வழக்கில் எந்த ஒரு பரிகாரமும் கோரப்படவில்லை. இருந்தபோதிலும் இவ்வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் மனுதாரர்கள்/வாதிகள் உரிய ஆவணங்களை சேகரம் செய்து மேற்படி 1–ம் எதிர்மனுதாரர் உத்தேச தரப்பினர்கள் நிறுவனத்தில் ஒரு பங்குதாரர் என்பதால் இந்த மனுக்களை தாக்கல் செய்து இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 6 உத்தேச தரப்பினர்களை பிரதிவாதிகளாக சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்கள். இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 6 ஆவணங்களும் உத்தேச தரப்பினர்கள் நிதி நிறுவனத்தில் இவ்வழக்கு 1–ம் எதிர்மனுதாரரும் ஒரு பங்குதாரராக இருந்து வருகிறார் என்பதை வெளிப்படுத்தக்கூடிய வகையில் உள்ளது. எனவே ஒவ்வொரு நிதி நிறுவனத்திற்கும் உள்ள மொத்த பங்குதாரர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து இந்த 1–ம் எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதிக்கு பங்கு விகிதாசாரம் /பங்கு உரிமை மாறுபடக்கூடியது ஆகும். எனவே மேற்படி மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தேச தரப்பினர்களை இந்த வழக்கில் பிரதிவாதிகளாக சேர்த்து கொள்வதற்கு உத்தரவிட்டு மேற்படி நிதி நிறுவனங்களையும் பிரதிவாதிகளாக சேர்த்துக்கொண்டால் மட்டுமே அதில் 1–ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு உள்ள உரிமையினை சரியான வகையில் முடிவு செய்ய இயலும். அவ்விதம் முடிவு செய்தால் மட்டுமே மேற்படி பங்குகளில் இந்த மனுதாரர்கள்/வாதிகளுக்கு உரிமை உள்ளதா? என்பதையும் மனுதாரர்களுக்கு கிடைக்க வேண்டிய ஜீவனாம்சத்தையும் இந்த வழக்கில் கண்டறிய இயலும். உத்தேச தரப்பினர்கள் அசல் வழக்கில் 5 முதல் 10 பிரதிவாதிகளாக மட்டுமே சேர்க்கப்பட இயலும்.

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:15:35 +0530

எனவே ஏற்கனவே ஒரு உத்தேச தரப்பினர் ராமசாமி என்பவர் 4—ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட வேண்டும் என்று இ.ம.எண்.2/2021 மனுவில் அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. அவ்வகையில் பார்க்கும்போது இந்த அசல் வழக்கிற்கு உத்தேச தரப்பினர்கள் அவசிய தரப்பினர்கள் என்பதால் மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடவேண்டி உள்ளது. மேற்படி உத்தேச தரப்பினர்கள் மற்றும் ஆஜர் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரைகளில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுளள் இந்த மனுவை தற்போதைய சூழ்நிலையில் நிராகரிப்பதற்கு போதுமானவை அல்ல. எனவே மனுதாரர்கள் சரியான பரிகாரத்திற்கு இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற காரணத்தினால் மனுதாரரின் இந்த மனுவானது அனுமதித்து உத்தரவிடுவதே நீதிக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவில் மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கப்பட்டும், உத்தேச தரப்பினர்கள் அசல் வழக்கில் 5 முதல் 10 பிரதிவாதிகளாக சேர்த்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது. மனுவின் சூழ்நிலை மற்றும் தரப்பினர்களின் உறவுமுறையை கருத்திற்கொண்டு செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் சரி பார்க்கப்பட்டு, 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 04—ம் நாளான இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R.Velaras
Digitally signed by R.Velaras
Date: 2025.12.04 18:15:49 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

சேலம்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :– இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: – இல்லை

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:16:02 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.